**கொலொன்ன பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொலொன்ன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆயுள்வேத உதவியாகக் கிடைத்திருந்த ரூபா 193,100 இற்கான மருந்து வகை இருப்புக்கள் வருமான உதவியென கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முதலீட்டு வட்டி ரூபா 42,883 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் என ரூபா 11,332,730 தொகை என இனங்கண்டிருந்த போதிலும், பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் என கணக்குகளில் ரூபா 11,470,039 தொகை காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 137,309 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நிதி நிலைமை பற்றிக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிடையே ரூபா 328,776 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அவ் வித்தியாசத்தை தொங்கல் கணக்கு ஒன்றிற்கு சீராக்கல் செய்து அல்லது பிழையினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவதானிக்கப்பட்டவாறு பலவின கடன்கொடுத்தோர், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் களஞ்சியக் கடன்கொடுத்தோர் தொடர்பாக வித்தியாசங்கள் என்பன அவற்றை பாதித்திருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 1,834,407 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 செலவுத் தலைப்புகள் தொடர்பாக வாக்குப்படி பேரேட்டின் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளை இணக்கஞ் செய்யும் போது ரூபா 56,134 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| | பிரிவு 132(ஔ) | விழா விடயங்களக்காக பிரதேச சபை நிதியத்திலிருந்து ஒரு வருடத்திற்கு செலவிடக் கூடிய உச்ச எல்லை ரூபா 1,000 எனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக தனது அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே காணப்படும் ஒரு நிறுவனத்திற்கு அதாவது எம்பிலிபிட்டிய நகர சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த எம்பிலிபிட்டிய வாராந்த சந்தையின் திறப்பு விழாவிற்காக தோரணம் ஒன்று நிர்மாணிப்பதற்கு ரூபா 150,000 தொகையொன்று பிரதேச சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டது. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 371(2) | வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதி வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணங்கள் ரூபா 83,310 தொகை காணப்பட்டது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 12,838,482 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,099,507 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 13,937,990 தொகையினால் அதிகரித்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 1267 சதவீத அதிகரிப்பு ஒன்றென அவதானிக்கப்பட்டது. அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்களில் அதிகரித்தலும் மீண்டுவரும் செலவுகளில் குறைவடைதலும் முக்கியமாக பாதித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 1,056 | 747 | 328 |
| வாடகை | 3,438 | 2,987 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 532 | 1,299 | - |
| ஏனைய வருமானங்கள் | 25,426 | 29,126 | 14,144 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வரி வருமானம், வாடகை வருமானம், சேவைக்கான கட்டணம், ஏனைய வருமானங்கள் மற்றும் உதவிநிதி ஆகிய வருமான விடயங்கள் சேகரித்த வருமானம் பாதீட்டு வருமானத்தை விட முறையே 31 சதவீதம், 13 சதவீதம், 37 சதவீதம், 50 சதவீதம், 41 சதவீதம், 51 சதவீதமிற்கான குறைவடைதல் ஒன்றினை காட்டியது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2014 நவம்பர் முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 11,276,680 வும், இரத்தினபுரி காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2014 திசெம்பர் முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 21,800 தொகை மற்றும் அவிசாவெளை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2014 பெப்ரவரி மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 34,250 தொகையான முத்திரைக் கட்டணம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றில் இருந்து 2015 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை ரூபா 383,166 தொகையான நீதிமன்றத் தண்டப் பண வருமானம் பெற வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் மயானப் பதிவேட்டின் பிரகாரம் 18 மயானங்கள் குறிப்பிட்டிருந்த போதிலும், இனங்காணப்பட்ட 22 மயானங்களின் அளவை விடயங்களுக்காக நில அளைவ கட்டணமாக ரூபா 295,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் 12 மயானங்களது சுவடு வரைதல் மாத்திரமே கிடைத்திருந்தது. மேலும் பிரதேச சபையினால் கிடைக்கப்பட்ட தகவல்கள் மீது இப் பிரதேசத்தில் 38 மயானங்களின் காணப்படுகின்றன எனினும் அம் மயானங்கள் காணி உறுதிகள் மற்றும் வரைபுகள் சபையிடம் காணப்படாததுடன் இடங்களின் பாதுகாப்பு தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை அவதானிக்கப்பட்டன.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து கிடைத்திருந்த WP ZA 4929 ஆம் இலக்க FOTON பெக்கோ இயந்திரம் நிறுவனத்தில் அனுகூலமான முறையில் வருமானம் சேகரிப்பதற்கு அல்லது நிறுவனத்தின் விடயங்களுக்காக பயன்படுத்துவதற்கு உரிய அறிவினை உடைய இயந்திர இயக்குனர் ஒருவர் சபையில் காணப்படாத சபையின் சாரதி வெற்றிடங்களின் காரணமாக பல வாகனங்கள் ஒரே சாரதிக்கு சாட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) 1996 ஆண்டின் போது சபை தீர்மானம் ஒன்றின் மீது அறவிடப்பட்ட தரை வரி கட்டணம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தம் செய்யாமல் 15 வருடங்களை விட மிகையான காலம் முதல் சூரியகந்த கடைகளில் இருந்து ஒரே கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. மேலும், இந்த வரி செலுத்துவோருடன் சட்டரீதியான உடன்படிக்கைகள் ஏதும் மேற்கொள்வதற்காக சபை 2016 ஜூன் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்காமையால் அந்த காணித் துண்டுகளை துணை வாடகைக்கு வழங்கும் ஆபத்திலிருந்து தப்புவதற்காக அல்லது தரை வரி செலுத்துவதை இடைநிறுத்துவதன் மூலம் சட்டநடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு சபைக்கு காணப்படும் சந்தர்ப்பம் நழுவப்பட்டுள்ளதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினூடாக உள்ளூராட்சி திணைக்களத்தினால் நிறுவனங்களில் குப்பை முகாமையினை மேம்படுத்துவதற்காக குப்பைகள் வகைப்படுத்தி சேகரிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு ரூபா 53,328 இற்கான 134 எண்ணிக்கையான குப்பைப் பாத்திரங்கள் கிடைத்திருந்ததுடன், அக் குப்பை பாத்திரங்களை தொக்குப் பதிவேட்டில் பதிவு செய்யாமல் உள்ளூராட்சி பிரதிநிதிகளின் சுய விருப்பத்தின் பிரகாரம் வினியோகிக்கப்பட்டிருந்தது. அந்த வினியோகத்திற்காக தகவு திரண்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான சூரியகந்த நகரில் கடை வளவின் இறுதி மூலையில் சபைக்கு சொந்தமான காணித் துண்டு ஒன்றினை அங்கீகாரமின்றி தனதாக்கி அகங்காரமற்ற நபர் ஒருவர் இரண்டு மாடி கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக திட்டமிட்டு தரை மாடியின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருந்தார். இது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருந்த போதிலும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலையை அகற்றுவதற்கு மற்றும் குறிப்பிட்ட காணிப் பகுதியை மீண்டும் சபைக்கு உரித்தாக்குவதற்காக முன் நடவடிக்கைகள் எடுத்தல் தாமதமாகியிருந்தது.

### 3.2 தன்னார்வ அமைப்புக்களுக்காக கதிரைகள் வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபை அமைச்சின் கீழ் தன்னார்வ அமைப்புகளுக்கு கதிரைகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 1,200,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 1,199,379 தொகை செலவிடப்பட்டு 2015 ஜனவரி 02 ஆம் திகதி 1598 கதிரைகள், 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் செயற்பாடுகளுக்கு முரணாக கொள்வனவு செய்திருந்தது. கதிரைகள் தொக்கு தொடர்பாக சபையின் இருப்பு பதிவேட்டில் பெறுவனவுகள் மற்றும் வினியோகித்தல் தொடர்பாக பதிவு ஏதும் இடம்பெற்றிருக்காததுடன், சபைக் காவலாளியின் நாளாந்தப் பதிவேட்டின் படி சபைக்கு கதிரைகள் கொண்டுவரப்பட்டிருந்தன எனவும் பிரதேச சபை அங்கத்தவர்கள் அக் கதிரைகளை எடுத்துச் சென்றிருந்தனர் எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அங்கத்தவர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட கதிரைகள் தன்னார்வ அமைப்புக்களுக்கு வழங்கியிருந்ததுடன் அந்த அமைப்புக்கள் தெரிவு செய்வதற்கு முறையான தகவு திரண்கள் மீது மேற்கொள்ளப்பட்டனவா என

உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், சபையின் மேற்பார்வையின்றி கதிரைகள் வினியோகிக்கப்பட்டிருந்தன.

(இ) பௌதீக பரிசோதனையின் பிரகாரம் பல சங்கங்களின் உத்தியோகத்தர் ஒரே குழுவைச் சேர்ந்த சங்கத்திற்காக 50 கதிரைகள் வீதம் வழங்குதல் நடைபெற்றிருந்தது. பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படாத சங்கங்களுக்கு 631 கதிரைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) வினியோகிக்கப்பட்டன என குறிப்பிடப்பட்ட கதிரைகளின் எண்ணிக்கை மற்றும் உண்மையாக வினியோகிக்கப்பட்ட கதிரைகளின் எண்ணிக்கையிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதென 2016 பெப்ரவரி 08 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 18,750 பெறுமதியான 25 கதிரைகள் தொடர்பாக தகவல்கள் ஏதும் அவதானிக்கப்படவில்லை. அத்துடன் ரூபா 285,959 பெறுமதியான 381 கதிரைகள் தொடர்பாக கதிரைகள் வினியோகிக்கப்பட்டதற்கான பௌதீக ரீதியாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(உ) தேர்தல் ஆணையாளரின் 2014 நவம்பர் 22 திகதிய கடிதத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடாத்த பெறுபேறுகள் வெளியிடப்படும் வரையான காலப்பகுதியில் ஏதேனும் அங்கத்தவர் ஒருவர் அரசியல் கட்சி ஒன்றினை மேம்படுத்தும் வகையில் அரசாங்க ஆதனங்களை பயன்படுத்தக் கூடாது என சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அந்த கட்டளைகளுக்கு முரணாக ஜனாதிபதி தேர்தலின் போது கதிரைகள் வினியோகித்தல் நடைபெற்றிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(i) சப்ரகமுவ மாகாண சபையினால் 2014 நவம்பர் 26 திகதி வழங்கியிருந்த SG RD – 7992 கொண்ட சாக்கடை பவுசர் பயிற்றப்பட்ட சாரதி ஒருவர் மற்றும் கழிவுகள் போடுவதற்கான இடம் ஒன்று காணப்படாமையால் தற்போது செயற்படு நிலையில் காணப்படவில்லை.

(ii) ஓட்ட நிலையில் காணப்படாத SG RA – 5736 டிரக்டர் (என்ஜின்), 252-6374 இலக்க கப் வண்டி, WP HC – 3718 இலக்கம் கொண்ட வான் வண்டி மற்றும் இலக்கம் SG HP – 3816 கொண்ட டிரக்டர் (என்ஜின்) ஆகிய வாகனங்களை மீண்டும் பழுதுபார்த்தல் அல்லது பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 353 இன் பிரகாரம் பயன்பாட்டில் இருந்து அகற்றுதல் அல்லது ஏலவிற்பனை செய்தலுக்கு நடவடிக்கை எடுக்காமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய வாகனங்கள் தொடர்பாக ஓட்ட நிலையில் காணப்படவில்லை என மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவித்தும் இருக்கவில்லை.

**(ஆ) உரித்தாக்கப்படாத சொத்துக்களை முறை சாரா விதமாக பயன்படுத்துதல்**

(i) சபைக்கு சொந்தமான காணிகள் என இனங்கண்டிருந்த வாராந்த சந்தை விளையாட்டுத் திடல்கள், குப்பை அகற்றும் காணிகள் ஆகிய 6 காணித் துண்டுகள் முறைப்படி சபைக்கு உரித்தாக்கி அவற்றின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) கொலொன்ன கோங்கஹஹேன என்ற 02 ரூட் 34 பர்சஸ் காணியினை மயானம் ஒன்றென நில அளவை செய்வதற்காக 2012 ஜூன் 26 ஆம்

திகதிய 091011 இலக்கங் கொண்ட காசோலையின் மூலம் அளவை கட்டணமாக ரூபா 13,440 செலுத்தப்பட்டிருந்ததுடன் தற்சமயம் அந்த காணியில் புதிய சபை கட்டிடத்தின் நிர்மாணவேலைகள் நடைபெற்ற போதிலும் அதனை சபைக்கு உரித்தாக்கும் விடயங்கள் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

**3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

குப்பை முகாமைத்துவம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்பட்ட போதிலும், நகரத்தில் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய குப்பைகளை திறந்த தரைப் பகுதியொன்றில் கிடங்குகள் வெட்டி புதைக்கும் முறை தற்போதும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்